

சென்னையில்

# பெண்கள் உலகப்படவிழா

"ஒன்பது நாட்கள், 53 நாடுகள், 175 படங்கள்" என்ற அமர்க்களமான கோஷத்துடன் அண்மையில் "பெண்கள் உலகப் படவிழா" சென்னையில் நடைபெற்றது!

பெண்களால் பெண்களின் பிரச்னைகளை முன்வைத்து உருவாக்கப்பட்ட திரைப்படங்களும், ஆண்களால் பெண்களின் தியாகத்தையும், சுயமுன்னேற்றத்தையும் விவரித்த படங்களும்,

மையத்"தின் நோக்கம். அந்த அடிப்படையில்தான் கடந்த 3 ஆண்டுகளாக பெண்கள் உலகப் படவிழாவை வெற்றிகரமாக நடத்தியது இம்மையம்!

தென்கொரிய நாட்டின் "பூசான்" நகரில் ஒவ்வோராண்டும் நடந்துவரும் பெண்கள் உலகப்பட விழாவை முன்மாதிரியாகக் கொண்டுதான் சென்னையில் அத்தகைய விழா தொடங்கப்பட்டது. இந்த ஆண்டின் விழாவை "சாம்சங் இந்தியா எலெக்ட்ரானிக்ஸ்" நிறுவனம் 'ஸ்பான்சர்' செய்திருந்தது.

சென்னையின் புறப்பகுதிகளில் பல கொரிய நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவி, மோட்டார் கார்கள், மின்னணு சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்து வருவதாலும் சென்னையில் நூற்றுக்கணக்கான கொரிய நாட்டு மக்கள் வந்து குடியேறி அந்த நிறுவனங்களில் பணியாற்றுவதாலும், அந்நாட்டு உணவைத் தயாரித்து விற்கும் பல உணவு விடுதிகளும் முளைத்துள்ளன. ஆகவே, "இந்தோ கொரியன் மையம்" இங்கு கொரிய மொழியைக் கற்றுக்கொடுக்கிறது. தென்கொரியத் திரைப்படங்களை ஒவ்வொரு மாதமும் திரையிடுகிறது. அதன் நீட்சியே இந்தப் பெண்கள் உலகப்படவிழா.

மையத்தின் தலைவி திருமதி ரதியும் இப்படவிழாவுக்கான திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்த பத்திரிகையாளர் திருமதி வசந்தி சங்கரநாராயணனும் ஒருங்கிணைந்து கடந்த 3 ஆண்டுகளாகப் பாராட்டும் வகையில் படவிழாவை நடத்தி வருகின்றனர். அதுவும் "பெண்கள் தினம்" வரக்கூடிய மார்ச் மாதத்தில்! இவ்விழாவுக்கு தேசிய திரைப்பட ஆவணக் காப்பகம்



சேர்ந்தவை! ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், சைனா, ஃப்ரான்ஸ், கென்யா, இங்கிலாந்து, ருமேனியா, ஸ்வீடன் போன்ற பெரிய நாடுகள் மட்டுமல்லாது, பாலஸ்தீன் ஹைத்தி, எஸ்தோனியா, அல்ஜீரியா, துனீஷியா, கேமரூன் போன்ற நாடுகள் கூடப் படங்களை அனுப்பியிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை ஆவணப்படங்களும் குறும்படங்களுமே.

நடிகை நந்திதாதாஸ் இயக்கிய "ஃபிராக்" என்ற இந்திப்படம் திரையிடப்பட்டது சிறப்பு அழைப்பாளர்களுக்காக!

குத்துவிளக்கேற்றி படவிழாவை தொடங்கிவைத்த ராதிகா சரத்குமார், பெண்கள் - உலகப்படவிழாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். விழாவிற்கு தமிழ்ப்பட இயக்குனர்கள் ஜே.மகேந்திரன், பாலுமகேந்திரா, வசந்த் ஆகியோர் வந்திருந்தனர்.

தொடக்க விழாவைத் தொடர்ந்து திரையிடப்பட்ட "ஃப்ராக்" என்ற படத்தின் தலைப்பிற்கு "தாகம்" என்றும் "பிரித்துவைத்தல்" என்றும் இருவேறு அர்த்தங்கள் உண்டு. 2002 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் "கோத்ரா" என்ற ரயில் நிலையத்தில் நின்றிருந்த ஒருரயில் வண்டியில் இருந்த 59 பயணிகள் உயிருடன் கொளுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அம்மாநிலத்தில் ஹிந்துக்களுக்கும் இஸ்லாமியருக்குமிடையே ஏற்பட்ட மோதல்களையும் வன்முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட கதை. "கற்பனைக் கதை" என்று 'டைட்டிலில்' காண்பித்துவிடுவதற்கேற்ப படத்தில் இடம்பெறும் சம்பவங்கள் அனைத்துமே உண்மை என்று சொல்லமுடியாது. வழக்கமான சினிமாப் பாணியில் காதல், நகைச்சுவை, வன்முறை இறுதியில் சுபம் என்றெல்லாம் இல்லாமல், அந்த குஜராத் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக ஆர்த்தி என்ற குடும்பத் தலைவி, கான்சாஹிப் என்ற ஹிந்துஸ்தான் இசைக் கலைஞர், முனீரா என்ற இஸ்லாமியப் பெண், அனுராதா என்ற ஹிந்துப் பெண்ணை மணந்த சமீர் என்ற இஸ்லாமிய இளைஞன்.... என்று இவ்வாறு பலதரப்பட்ட பாத்திரங்களின் மனவேதனையும், துக்கமும், பழிவாங்கும் மனப்பான்மையும் விவரிக்கப்பட்டுள்ளதால் ஒரு 'டாக்கு-டிராமா' உணர்வு வருவதைத் தடுக்க இயலவில்லை. ஹிந்துஸ்தானிப் பாடகராக நசீருதீன் ஷா, கணவனால் முரட்டுத்தனமாக நடத்தப்படும் குடும்பத் தலைவியாக தீப்தி நவல் நடித்திருக்கும் இப்படத்தில், எல்லா ஊடகங்களும், அரசியல் விமரிசகர்களும், வழக்கமாகச் செய்வது போலவே, "கோத்ரா" ரயில் நிலையத்தில் நடந்த வன்முறைச் சம்பவத்தை இருட்டடிப்பு செய்திருக்கிறார் இயக்குனர் நந்திதாதாஸ்! ரவி கே.சந்திரனின் ஒளிப்பதிவும், ராஜத் தோலாக்கியாவின் பின்னணி இசையமைப்பும் மிகச் சிறப்பு.

சென்னையில் விழா நடந்ததால், தமிழ்ப் படங்களைத் தவிர்த்துவிடக்கூடாது என்ற கவனத்துடன் கே.பாலச்சந்தரின் "அவள் ஒரு தொடர்கதை", பாரதிராஜாவின் "புதுமைப்பெண்", பாலுமகேந்திராவின் "வீடு" மகேந்திரனின் "உதிரிப்பூக்கள்" மணிரத்னத்தின் "மௌனராகம்" ஆகிய படங்களும் திரையிடப்பட்டன. கவிதாயினி குட்டி ரேவதி இயக்கிய ஆவணப்படமான "கல் மனிதர்கள்" விழாவில் இடம்பெற்றது.

முழுநீளக் கதைப் படங்களின் எண்ணிக்கைக்கு இணையாக ஆவணப் படங்களும் திரையிடப்பட்டதால், உலக அளவிலேயே பெண்களால் இத்தகைய ஆவணப் படங்கள்தான் பெருமளவில் உருவாக்கப்படுகின்றன என்று கணிக்க முடிந்தது. உதாரணமாக, "முகங்கள்" என்ற தென்கொரிய ஆவணப்படம், ஒரு நிறுவனத்தில் பணிசெய்து, பின்னர் அந்நிறுவனம் வேறூருக்கு மாற்றப்பட்டதால், வேலைவாய்ப்பை இழந்த பெண்களின் போராட்டத்தை முன்வைத்தது. அதேபோல், குட்டி ரேவதியின் "கல் மனிதர்கள்" ஆவணப்



அறந்தை மணியன்



படத்தில் கல்-குவாரிகளில் கடுமையாக உழைத்தும் போதிய உணவோ, உறைவிடமோ இல்லாமல் தவிக்கும் உழைப்பாளர்களின் பிரச்னைதான் முன்னிறுத்தப்பட்டிருந்தது. இரண்டு ஆவணப்படங்களுமே பெண்கள் இயக்கியவையாக இருந்தாலும், "பெண்ணியத்தை முன்வைக்காமல், வேலைவாய்ப்பு, பணிநிரந்தரம், பணியாற்றும் இடத்தில் கிடைக்க வேண்டிய குறைந்த பட்ச வசதிகள் ஆகியவற்றிற்காகப் போராடும் பெண்களையும் அல்லல்படும் தொழிலாளர்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தன. இப்படங்களை கற்பனை கலந்து முழு நீளக்கதைப்படங்களாக உருவாக்கியிருக்க முடியும். அதைவிட ஆவணப்பட பாணியே வலுவானதாக இருக்கும் என்று அவர்கள் கருதியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது."

இந்தியாவைச் சேர்ந்த 'சமீராஜெயின்' என்பவர் இயக்கிய "வீட்டில் பிறக்கும் குழந்தைகள்" என்ற ஆவணப்படத்தில், சிற்றூர்களிலும் கிராமங்களிலும் இன்னமும் வீட்டிற்கு வந்து பிரசவம் பார்க்கும் 'மருத்துவச்சி' களைப் பற்றியதாக விவரணம் இருந்தது.

நமது நாட்டில் ஐம்பது சதவிகிதக் குழந்தைகள் இம்முறையில் வீட்டில்தான் பிறக்கின்றனவாம்! அப்படியிருந்தும் இத்தகைய மருத்துவச்சிகளுக்கு உரிய அங்கீகாரமும் நிச்சயிக்கப்பட்ட ஊதியமும் இல்லை என்பதை இப்படம் சுட்டிக்காட்டியது.

நமது நாட்டில் திரைப்படத்தில் நடித்த முதல் பெண்மணியான "கமலாபாய்" என்பவரைப் பற்றிய ஆவணப் படம் சிறப்பு. இப்படம் உருவாக்கப்பட்டபோது அவருக்கு 92 வயது! தனியாக வாழ்ந்து வந்த அந்த மராட்டியப் பெண்மணி, 1914-ஆம் ஆண்டு தாதாசாகேப் பால்கே உருவாக்கிய "திரௌபதி வஸ்திராபஹரணம்" என்ற மௌனப்படத்தில் "திரௌபதி" யாக நடித்தவர்.

"எட்டில் ஒருவர்" என்ற ஆஸ்திரிய நாட்டு ஆவணப்படம் பெண்களுக்கு வரும் மார்பகப் புற்று நோய் பற்றியது. பெண்களில் எட்டுப் பேரில் ஒருவருக்கு இந்நோய் வரும் வாய்ப்பிருக்கிறதாம். பாதிக்கப்பட்ட 2 ஆஸ்திரியப் பெண்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் நேரடியாக அப்படியே படம் பிடிக்கப் பட்டிருந்தன. இப்போதெல்லாம் மார்பகத்தை முழுமையாக நீக்க வேண்டிய அவசியமில்லாமல், நுணுக்கமாக, உள்ளே உருவாகி இருக்கும் புற்றுநோய்க்கட்டியை லேசர் மூலம் அறுவைச் சிகிச்சை செய்து விடலாமென்று இந்த ஆவணப் படம் காட்டியது. இதனால் பெண்களுக்கு (மார்பகம் நீக்கப்பட்டால்) ஏற்படக் கூடிய மன உளைச்சலையும் தாழ்வு மனப்பான்மையையும் தவிர்க்கலாமாம்!

கணவனால் பெரும் துன்பத்துக்காளாகும் ஒரு பெண் பொங்கியெழுந்து அவனைச் சுட்டுக் கொன்றுவிடுவதை "தள்ளுவண்டிக்காரி" என்ற செனகல் நாட்டுக் குறும்படம் விவரித்தது. தள்ளுவண்டியில் பழங்களை வைத்து விற்று வரும் ஒரு கருப்பினப் பெண்ணின் போராட்ட வாழ்க்கையை இப்படம் சித்திரித்தது.

முப்பதாண்டுகள் தம்பதிகளாக வாழ்ந்தும் மன வேற்றுமையால் விவாகரத்து செய்த ஒரு யூத இனக் கணவன் மனைவியின் வாழ்க்கையை 'ஃப்ளாஷ்பேக்' முறையில் சித்திரித்தது மெக்சிகோ நாட்டுப்படமான "நோரா இல்லாமல் ஐந்து நாட்கள்" குறும்படம். பெரும்பாலும் கிறித்துவர்கள் வாழும் அந்நாட்டில், இறந்துபோன யூதப் பெண்மணியை அடக்கம் செய்ய எந்த மயானமும் அனுமதிப்பதில்லை. ஏனெனில் அவள் விவாகரத்து ஆனவள் என்பதால்! அதனால் ஐந்து நாட்கள் போராட வேண்டிய அல்லலுக்கு உள்ளாகும் அக்குடும்பத்தினர் எவ்வாறு அவளை அடக்கம் செய்கிறார்கள் என்பதுதான் இக்குறும்படத்தின் கதையாக இருந்தது.

இவ்விழாவில் திரையிடப்பட்ட மிகப் பழமையான படம், 1935-ல் ஜெர்மனியில் "லீனி ரைஃபன்ஸ்டால்" என்ற பெண் இயக்குனரால் உருவாக்கப்பட்ட "Triumph Of The Will" என்ற ஆவணப் படம்தான்! இரண்டு மணி நேரம் ஓடும் அந்தக் கருப்பு - வெள்ளைப்படம் 1934ல் ஜெர்மனியில் ஹிட்லரால் நடத்தப்பட்ட ஒரு மாபெரும் பேரணியை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறது.

மிக அண்மைக்காலப் படங்களாக 2009ல் வெளியான இரண்டு துருக்கி நாட்டுப் படங்களைக் குறிப்பிடலாம். "ஆலன்ரெனே" என்ற ஃப்ரெஞ்ச் இயக்குனர், "இங்மார் பெர்க்மன்" என்ற ஸ்வீடன் நாட்டு இயக்குனர், ராபர்ட்டோ ரோஸல்லினி என்ற இத்தாலி நாட்டு இயக்குனர், ஹம்பர்ட்டோ சோலாஸ் என்ற க்யூபா நாட்டு இயக்குனர் ஆகியோரின் பழைய படங்களும் இடம்பெற்றிருந்தன.

படவிழாவின் கடைசிநாளன்று இறுதியாகத் திரையிடப்பட்டது: "I Will Be Seeing Her" என்ற தென்கொரிய நாட்டு ஆவணப்படம். அந்நாட்டுத் திரையுலகின் புகழ்பெற்ற பழைய நடிகைகள் பங்கேற்ற திரைப்படக் காட்சிகள், அவர்களின் நேர்காணல்கள் ஆகியவை தொகுக்கப்பட்டு 52 நிமிடங்கள் ஓடும் ஒரே படமாக, கிட்டத்தட்ட அந்நாட்டுத் திரையுலக வரலாறாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. பாராட்டத்தக்க முயற்சி! இத்தகைய ஆவணப் படத்தைத் தமிழிலும் உருவாக்க நமது இளம் பெண்கள் முன்வரலாம்!

சிறப்பாக நடந்த இந்த "பெண்கள் உலகப்பட விழா"வுக்கு அதிக அளவில் ரசிகர்கள்-குறிப்பாகப் பெண்கள்-வரவில்லை என்பதுதான் ஒரேகுறை! தொடக்க நாளைத் தவிர பிறநாட்களில் எந்தவொரு காட்சியிலும், படவிழா நடந்த இரண்டு அரங்குகளிலும், பார்வையாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தத ஏனென்று புரியவில்லை! ▮

